பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

# மா.போத்தநதி - பிடிமண் பெண்தெய்வக் கோயில்களும் வழிபாடும்

# Ma.Pothanathi- Temples and Rituals of Sand Established Female Deities

**முனைவர் கி. நாகேந்திரன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.

**Dr K. Nagendran,** Assistant Professor, Department of Tamil, Sri.S.Ramasamy Naidu Memorial College, Sattur, Virudhunagar District.

**ORCiD: https://orcid.org/0000-0003-2865-7832**

**DOI: 10.5281/zenodo.5802585**

## Abstract

*The article decodes about the Temples and Rituals of Sand Established Female Deities in Ma.Pothanathi of Madurai district. A direct survey had been done to get the real facts behind the temples. There are many reasons for establishing the temples by takingthe sand from the original temples. The reasons are also discussed in the paper.*

**Keywords:** Temples, Rituals, Sand Established Female Deities, Ma.Pothanathi, Madurai

## முன்னுரை

மனிதன் இயற்கையின் ஆற்றலுக்கு அஞ்சி அதன் கோபத்திலிருந்து விடுபட இயற்கையை வழிபடத் தொடங்கிய நாளிலிருந்து இயற்கை வழிபாடு தோன்றியது எனலாம். பலி இடுவதன் மூலம் இயற்கையைத் தன்வயப்படுத்தி, இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபட ஆரம்பித்தான். இதன் அடிப்படையில் பற்பல வழிபாடுகளும் அதன் முறைகளும் தோன்ற தொடங்கின. ஒரு குறிப்பிட்ட ஊர் மக்கள், குறிப்பிட்ட சாதியினர் அல்லது பங்காளிகள் சேர்ந்து வழிபடும் போது மக்களுக்குள் ஏற்படும் உரிமை காரணமாகவும், வழிபாட்டில் ஏற்படும் ஏற்றதாழ்வு மனப்பான்மை, சிற்சில பூசல்களின் காரணமாகவும் மூலப்பெருங்கோயில்களில் மண்ணை எடுத்து பிரிந்து வந்து தனியாக தங்கள் சமூதாயத்திற்கு சொந்தமான நிலத்தில் பிடிமண்ணை வைத்து கோயில் கட்டி வழிபட ஆரம்பித்தனர். அக்கோயில்களே பிடிமண் கோயில்களாகும். ஆயுதம் மட்டும் உள்ள கோயில், ஆசானக்கல் மட்டும் உள்ள கோயில், மண் மேடை மட்டும் உள்ள கோயில் மற்றும் சில உருவச் சிலையுடன் மண்டபத்தில் அமைந்த கோயில் என பிடிமண் கோயில்கள்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

வகைப்படுத்தப்படுகின்றன. மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாரத்திலுள்ள மா.போத்தநதி கிராமத்தில் அமைந்துள்ள பிடிமண் பெண்தெய்வக் கோயில்களையும் அதன் வழிபாட்டு முறைகளையும் ஆராய்வதே இவ்ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**பிடிமண் எடுத்தல்**

பொதுவான இடத்தில் உள்ள பெருந்தெய்வத்தைத் தனியாக வழிபட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் ஒரு குழுவாக இணைந்து தெய்வப்பிடி மண்ணை எடுக்க தெய்வ அருள் உள்ள ஒருவருடனும் கோடாங்கி அல்லது உடுக்கை அடித்துப் பாட்டுப்பாடி அருள் வந்து ஆடி குறிகூறுபவருடனும் சென்று அவர்கள் ஆலோசனையின்படி கையளவு பிடிமண்ணை எடுத்து வருவர். சில இனத்தவர்கள் நல்ல நாள் பார்த்து, நடு சாமத்தில் தாம் முன்பு வழிபட்ட கோயிலுக்குச் சென்று கைப்பிடி மண்ணை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

பிடிமண்ணை கோயிலின் எந்தப்பகுதியிலும் எடுக்கலாம். ஆனால் இவர்கள் அந்த கோயிலில் உள்ள பூசாரிக்கும், அருள்ஆடிக்குறி கூறுபவர்க்கும் தெரியக்கூடாது என்று நினைப்பர். மண் எடுக்கப்படும் கோயில் சேய்மையில் இருந்தால் பச்சை மண்குடத்தில் பிடி மண்ணை எடுத்துக் கொண்டு வாகனங்களில் வந்து விடுகின்றனர். அண்மையில் இருப்பின் நடந்தே வந்து விடுகிறார்கள். அவ்வாறு வரும் போது எண்ணற்ற தெய்வங்கள் அவர்களைத் தடுத்து துன்பம் தரும் என்று நம்பிக்கை கொள்கின்றனர். அதற்கு எழுமிச்சைப்பழம் அல்லது சேவலைப் பலியிடுகின்றனர். முட்டையை எறிந்தும், அணையா நெருப்பு வைத்துக் கொண்டும் மண்ணைக் கொண்டு வருகின்றனர். இப்பிடிமண்ணைக் கொண்டு வருகின்ற போது கவனமாகவும் நேர்த்தியுடனும் சிரமப்பட்டும் வருகின்றனர். தலைமை தெய்வத்திற்கு மட்டும் பிடிமண் எடுத்து வரப்படுகின்றது. அவ்வாறு எடுத்து வரும்பொழுது சுற்று தெய்வங்கள் தலைமைத் தெய்வத்துடன் வந்து விடும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்திருக்கின்றது. சில இடங்களில் துணைமைத் தெய்வத்திற்கும் பிடிமண் எடுத்து வரும் வழக்கம் காணப்படுகின்றது.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

**பிடிமண்பூமியில் வைத்தல்**

பிடிமண்ணைக் கொண்டு வந்து தெய்வத்தை வழிபட நினைக்கும் நிலத்தில் முதலில் குழி தோண்டப்படுகின்றது. அந்த குழியில் மல்லிகைப்பூ, எழுமிச்சைப்பழம், செவ்வரலிப்பூ, மரிக்கொழுந்து, வேப்பிலை, காதோலை கருகமணி, மஞ்சள், குங்குமம், சந்தனம், கருங்காலிமரத்தின் சிறிய கட்டை அல்லது பிரம்பின் சிறிய கட்டை இவை அனைத்தையும் தெய்வத்தை மனதில் எண்ணி தோண்டப்பட்ட குழியில் புதைக்கின்றனர். இச்சமயம் பெண்தெய்வங்களுக்கு எனில் பிடிமண்ணுடன் பால், கோமியம் சேர்க்கப்படுகின்றது. ஆண் தெய்வங்களுக்கு எனில் வேப்பிலை, காதோலைகருகமணி தவிர்க்கப்படுகின்றது. பிடிமண்ணை இட்டு மூடி மண்மேடை அமைத்து பெருந்தெய்வமாக வழிபடுவர். மண் மேடைகள் மழைகாலங்களில் பாதிக்கப்பட்டால் ஆண்டுக்கு ஒருமுறை, இரண்டாண்டுக்கு ஒருமுறை, ஐந்தாண்டுக்கு ஒருமுறை அல்லது அந்த தெய்வத்திற்கு பூசைக்கொடுக்கும் போது புதிதாக மண்மேடை அமைத்து வழிபாடு ஆரம்பிக்கின்றனர். இக்கோயில்கள் வழிபாட்டு காலத்தைத் தவிர்த்து மற்ற காலங்களில் வெட்டவெளியில் காணப்படுகின்றன.

**பிடிமண் கோயில் வரலாற்றுக்கு சான்றுகள்:**

**மாரியம்மன்**

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாரத்திலுள்ள ம.போத்தநதி கிராமத்தில் அமைந்துள்ள மாரியம்மன் தெய்வம், அருப்புக்கோட்டை கல்லூரணி பகுதியில் இருந்து சங்கரலிங்க நாடார் என்பவர் எடுத்து வந்ததாகக் கூறப்படுகின்றது. அந்த ஊரில் இருந்து அந்த இனமக்கள் அனைவரும் பிடிமண்ணை ஒர் ஓலைப் பெட்டியில் எடுத்து வந்ததாகவும், அவர்கள் போத்தநதி ஆற்றங்கரையருகே வரும் பொழுது துணி துவைக்கும் பொதையவண்ணாரிடம், சங்கரலிங்க நாடார் இந்த ஊர் எந்த ஊர் என்று கேட்க, ஊர் பெயரைச் சொன்னவுடன் சரியென்று ஊருக்குள் வந்து இருக்கின்றனர். அங்கு வந்து ஊரில் உள்ள மக்களிடம் விசாரித்துள்ளார். அச்சமயம் ஒருவர் ஓலைப் பெட்டியில் உள்ளது என்ன வென்று கேட்டுள்ளார். அதற்கு சங்கரலிங்க நாடார் மாரியம்மன் தெய்வம் என்று கூறியுள்ளார். அதற்கு கேட்டவர் எங்களுக்கு தெய்வம் இல்லை என்றும் அந்த தெய்வத்தை எங்களுக்கு கொடுங்கள் என்றும் கேட்டுள்ளார்.

நான் தெய்வத்தைக் கொடுத்தால் கொண்டு செலுத்திவிடுவீர்களா? என்று கேட்டுள்ளார். அதற்கு அவர் கொண்டு செலுத்திவிடுவோம் என்று கூறியுள்ளார். அவர் அங்குள்ள மக்களைக் கூப்பிட்டு இந்த தெய்வத்தைப் பத்து வீட்டு பள்ளர், மூன்று வீட்டு ரெட்டியார், ஒரு வீட்டு ஆசாரி, ஒரு வீட்டு வண்ணார் மற்றும் ஒரு வீட்டு அம்பட்டையர் சேர்ந்து இத்தெய்வத்தை வழிபடுங்கள் என்று இவர்கள் கையில் கொடுத்து விட்டு குருவம்மாள் கிழவியின் மேல் தெய்வத்தை அருள் இறக்கிவிட்டு ஊரை விட்டு சென்று விட்டார் என்ற செய்தி நிலவியது. இதை உறுதிப்படுத்தும் விதமாக திருவிழா சமயம் **“சங்கரலிங்க நாடாரு நட்டுவச்ச மாரி, குருவம்மா கிழவிமேலே ஆடிவந்த மாரி” (ப.லட்சுமி)** என்று பாடப்படும் கும்மி பாடலும் சான்றாதாரமாக அமைகின்றது. ம.போத்தநதி கிராம மக்கள் அந்த பிடிமண்ணை வைத்து மேடையமைத்து சூலாயுதம் நட்டு வழிபாடு செய்துள்ளனர். பின்பு சில காலம் கழித்து வீடு அமைத்து அதனுள் ஆசானக் கல் அமைத்தும் வழிபாடு செய்து வந்துள்ளனர். 2012ஆம் ஆண்டு கோபுரம் கட்டி சிலை அமைத்தும் வழிபாடு செய்துள்ளனர்.

**உருவம்**

வழிபாட்டில் உருவ வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்தது. உருவ வழிபாட்டில் தெய்வங்களின் தன்மைகளுக்கேற்ப ஆயுதங்கள் ஏந்தியவாறு உருவங்கள் அமைக்கப்பட்டு வழிபாடு நடந்துள்ளது. **“இறைவனை பழந்தமிழர் கோ என்னும் ஓரெழுத்தொருமொழியால் அழைத்தமையின் அவ்விறைவனைச் சிவலிங்க உருவில் எழுந்தருளச் செய்து தாம் அமைந்த ஒரு இல்லினையும் அம்மொழியோட சேர்ந்துக் கோயில் என வழங்கினர்” (தமிழர் சமயம், ப.159)** நாட்டுப்புற தெய்வக் கோயில்களில் பெருந்தெய்வக்கோயில்கள் போன்று ஓர் வளர்ச்சிநிலை காணப்படவில்லை. **“சிற்றூர்க் கடவுளரின் கோயில்கள் கூறை வேயப்பட்ட சுடுமண் கோயில்களே இவற்றில் எந்தவிதமான சிற்ப, ஓவிய நலன்களையும் எதிர்பாக்க முடியாது” (முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப.1)** இந்நிலையிலேயே கிராமப்புற கோயில்களின் நிலை காணப்படுகின்றது. ம.போத்தநதி கிராம மாரியம்மன் அக்கினி மகுடம் தாங்கி சிங்கத்தின் மேல் அமர்ந்து வலது கால் ஊன்றி இடது கால் மடக்கிய தோற்றத்தில்

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

காட்சி அளிக்கின்றது. இந்த அம்மனுக்கு நான்கு கைகள் உள்ளன. வலதுகையில் உடுக்கையும், கீழ் கையில் கத்தியும், இடது மேல் கையில் சின் முத்திரையும், கீழ் கையில் பாசக்கயிறும் காணப்படுகின்றது.

**வழிபாடு முறை**

பங்குனி மாதம் பிறந்ததில் இருந்து மாரியம்மன் கோயிலைச் சுற்றி மாட்டின் கோமியம் தெளிக்கப்பட்டு மஞ்சள் நீராட்டு நடைபெறுகின்றது. கோயிலைச் சுற்றி மாட்டின் கோமியத்தையும் தெளிக்கின்றனர். வளர்பிறையின் ஞாயிற்று கிழமையன்று பள்ளர் சமுதாய மக்கள் ஒன்று கூடி வழிபாட்டிற்கு நாள் குறித்து மூன்று வீட்டு ரெட்டியார், வண்ணார், ஆசாரி, அம்பட்டையர்களிடமும் செய்தி சொல்லப்படுகின்றது. மறுஞாயிற்று கிழமையன்று மாரியம்மனுக்குக் காவல் தெய்வமான கருப்பசாமி, காளியம்மன், பொம்மியம்மன் அருள் இறக்கப்பட்டு, வேப்பிலைக்கொடி கட்டப்படுகின்றது. மஞ்சள் காப்பும் கட்டிக் கொள்கின்றனர். சாமியாடும் மருளாடிகள் விரதம் இருக்கின்றனர். காப்பு கட்டிய வீட்டில் குழம்பு தாலிப்பது, வாழையிலை போட்டு சாப்பிடுவது, சமையலில் வருப்பதைத் தவிர்ப்பது, மண் வெட்டுவது, அசைவம் செய்வது போன்ற எந்த செயல்கள் நிகழ்வது கிடையாது. பின்பு வழிபாடு அன்று மாரியம்மன், காளியம்மன், பொம்மியம்மன், கருப்பசாமி அருளாடிகளுக்கு அருள் இறக்கி உத்தரவு கேட்டு வேப்பிலை கரகம் கௌசிமா நதிகரையில் செய்து கோயிலில் வைத்து வழிபாடு நடைபெறுகின்றது. வெள்ளை பொங்கல் இட்டு ஆட்டுக்கிடாய் பலியிட்டு மாரியம்மனுக்குக் கோயிலில் வழிபாடு நடைபெறுகின்றது.

**வீடுகளில் வழிபாடு**

ஊர் மக்கள் அதே நாளில் அவரவர் வீட்டில் அம்மனுக்கு ஆக்கிப் படைக்கின்றனர். பின்பு கோயில் கரகம் வந்ததும் அவரவர் தகுதிக்கு ஏற்றார் போல் கரகம் செய்து அவரவர் வீட்டில் ஆக்கிப்படைத்ததை வீட்டில் உள்ள கரகத்தின் முன்பு படைத்து வழிபாடு செய்வார்கள். வீட்டில் உள்ள கரகவழிபாடு நிறைவடைந்ததும் பின்பு தண்ணீர் உள்ள இடத்தில் கரகம் கரைக்கப்படுகின்றது. நேர்த்திக்கடன் உள்ளவர்கள் கோயிலில் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவு செய்கின்றனர்.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

**ஆக்கிப்படைத்தல்**

**அத்த புலுங்கு அம்மா**
**வெடக்கோழி முட்டையம்மா**
**பலகாய் அவியலம்மா**
**கத்திர்கா முருங்டக்க கூட்டம்மா**
**எள்ளுபிண்ணாக்கு எட்டி பார்த வராந்தவுடு**
**துவரை சம்பாரு கச்ச கருவாடு**
**ஆரிசி கொழுக்கட்டை அகத்தி கீரைகூட**
**தலைவாழை இலைபோட்டு**
**இத்தனையும் தான் பரப்பி**
**மாவிடுச்சா திம்பமுள்ள மாரியத்தா பொங்ககளுக்கு" (பா.சின்னம்மா)**

மாரியம்மனுக்கு கிராமப்புறங்களில் அவரவர் வீட்டில் ஆக்கிப் படைப்பது வழக்கம். அன்றே அவித்த நெல்லை அப்பொழுதே காய வைத்து இடித்த அத்தப் புலுங்கல் அரிசியை, வெடக்கோழி அடித்து குழம்பு வைத்து, முட்டை அவித்து, பற்பல காய் அவியல் செய்து, கத்தரிக்காய் முருங்கக்காய் கூட்டு செய்து, துவரம் பருப்பு சாம்பார், ஆற்றில் பத்தல் போட்டு பிடிக்கின்ற மீனை காய வைத்த கருவாடு, கச்ச கருவாடு இவற்றுடன் எள்ளு பிண்ணாக்கு, வரகுஅரிசி தவிடு, அகத்திகீரை, கொழுக்கட்டை போன்றவற்றை மாரியம்மனுக்குப் படைத்து வழிபடுகின்றனர்.

**மூர்த்தியம்மன் வழிபாடு**

ஆதிகாலத்தில் ஆந்திராவில் இருந்து வந்த ரெட்டி இனமக்கள் தமிழ்நாட்டில் ஆங்காங்கே குடிபுகுந்தனர். அதில் ஒருபிரிவினரான அதிகப்பரெட்டி இனமக்கள் மதுரையில் குடிபுகுந்தனர். அதில் அதிகப்ப ரெட்டி மகள் திம்மக்காளும் பட்டுநூல் நெசவு செய்யும் செட்டி மகளான மூர்த்தியம்மாவும் நெருங்கிய நட்பாக இருந்துள்ளனர். திம்மக்கம்மா இறந்து விடுகின்றாள். தன் தோழி இறந்த செய்தி கேட்டு மூர்த்தியம்மாவும் உடன்கட்டை ஏரி விடுகிறாள். பின்பு ரெட்டி இனமக்கள் மதுரையில் இருந்து தெற்கு பக்கமாக தன்பிள்ளைகளை எரித்த சாம்பலை எடுத்துக் கொண்டு மதுரை மாவட்டம் பேரையூர் வட்டமான அப்பக்கரை தொட்டியப்பட்டியில் குடிபுகுந்து வாழ்ந்து வருகின்றனர். அதேசமயம் தான் கொண்டு வந்த சாம்பலையும் வைத்து வழிபாடு செய்கின்றனர். அங்கு வாழ்ந்த ரெட்டி இனமக்களுக்கும், நாயுடு, தேவர்,

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

பிள்ளை போன்ற இனமக்களுக்கும் சிலகாலம் கழித்து சாதிபூசல் தொடங்குகின்றது. இதன் காரணமாக நாயுடு, ரெட்டி இனமக்கள் ஊரை விட்டு செல்கின்றனர். நாயுடு இனமக்கள் அக்கையன்நாயக்கன்பட்டி என்ற ஊர் பக்கத்தில் புதிய ஊரை உருவாக்கி புதுப்பட்டியில் வாழத் தொடங்குகின்றனர்.

அதிகப்பரெட்டி இனமக்கள் மூன்று பிரிவுகளாக பிரிகின்ற போது அவர்கள் தன் குலதெய்வப் பிடிமண்ணையும் எடுத்து செல்கின்றனர். சௌடார்பட்டி மீனாட்சிபுரம், ம.போத்தநதி, நமச்சிவாயபுரம் என்ற மூன்று ஊருக்கும் பிடிமண் எடுத்து சென்று உள்ளனர். இவர்களில் இரண்டாவதாக பிடிமண் எடுத்தவர்கள் தொட்டியபட்டியில பிடிமண் எடுக்கும் பொழுது தொட்டிய நாயக்கர்களின் குலதெய்வமான தொட்டிச்சியம்மனும், பெரிய கருப்பசாமியும் எங்களை வழிபடுவதற்கு இங்கு ஆட்கள் இல்லை, அதனால் எங்களையும் பிடிமண் எடுத்துக்கொண்டு சென்று வழிபடுங்கள் என்று அருள் வந்து சொன்னதாகவும் பின்பு அந்த தெய்வத்தையும் எடுத்து வந்து வழிபட்டனர் என்றும் கூறுகின்றனர்.

**முதன்மை தெய்வங்கள்:** பெருமாள், திம்மக்கம்மாள், மூர்த்தியம்மாள்

**துணை தெய்வங்கள்:** தொட்டிச்சியம்மாள், பெரியகருப்பசாமி, நொண்டிகருப்பசாமி, முனியாண்டி.

**கோயில் அமைப்பு**

கோயில் ஊருக்கு வடக்கு கௌசிமா நதிக்கரையில் உள்ளது. ஆசானக் கல்லும் கூலாயுதமும் உள்ளது. அம்மிக்கல் ஒன்றும் உள்ளது இதைச் சுற்றி கோட்டை போல் இரயில் கற்றாலை வளர்ந்து உள்ளன. 2019ம் ஆண்டு கோட்டை சுவர் கோபுரம் கட்டி குடமுழுக்கு நடந்தது என்று மக்கள் கூறுகின்றனர்.

**வழிபாடு**

மாசி மாதம் அமாவாசை அன்று அம்மிக்கல்லில் மஞ்சள் அரைத்து ஆசானக்கல்லுக்கு அபிசேகம் செய்யப்படுகின்றது. அன்று பொங்கல் வைத்து பாசிபருப்பு சக்கரை, கருப்பட்டி கலந்த படையல் படைத்து வழிபாடு நடைபெறுகின்றது.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

**களரி வழிபாடு**

வைகாசி மாதம் இந்த வழிபாடு 2,3,5,10, ஆண்டுக்கொரு முறை நடைபெறும் அல்லது அந்த பங்காளிகளிடம் துக்கம் இல்லாமல் இருந்தால் விழா நடைபெறும். இக்கோயிலில் அறுபது வருடங்கழித்து(60) 2016ம் ஆண்டு இந்த வழிபாடு நடைபெற்றது என்று கூறுகின்றனர். களரிவழிபாட்டில் பங்காளிகள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் விதமாக புளிச்சதண்ணீர் குடிப்பது முன்பு இருந்த பூசல்கள் அனைத்தும் மறந்து சமரசம் ஆகிவிடுவோம் என்றும் தெய்வத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்தும் வெளிப்படுகின்றது.

**வழிபாட்டு முறை**

கோடாங்கியிடம் தெய்வக்குறி பார்க்கப்படுகின்றது. (கோடாங்கி என்பவர் அனைத்து தெய்வத்தையும் தன்னுள் அருள் வரவைத்து குறிசொல்பவர்) அவர் இந்த வருடம் வழிபடலாம் அல்லது வழிபடமுடியாது என்று குறி கூறுகிறார். வழிபடலாம் என்றால் அனைத்து பங்காளிகளையும் ஒன்று சேர்த்து தகுதிக்கு ஏற்ப வரிவசூல் செய்து திருவிழாவினைக் கொண்டாடுகின்றார்கள். பின்பு பங்காளிகள் அனைவரும் அழகர்கோயிலுக்குச் சென்று தீர்த்தம் ஆடி அங்கு வழிபாடு செய்து கோயிலுக்கு வருகின்றனர். அச்சமயம் அனைத்து பங்காளிகளின் வீட்டில் இருந்தும் புளிச்சதண்ணீர் கொண்டு வந்து அந்த கோயில் பூசாரியிடம் கொடுப்பர். பூசாரி அனைவரிடமும் அந்த தணிணீரை வாங்கி குடத்தில் சேகரிக்க, அனைவரும் அந்த ஊரில் உள்ள பிள்ளையார்கோயிலுக்குச் சென்று புளிச்சதண்ணீர் குடத்தை வைத்து வழிபாடு செய்கின்றனர். பூசை முடிந்த பின் குடத்தில் அனைத்து பங்காளிகளும் ஒருரூபாய் நாணயத்தைக் குடத்தில் போட்டு புளிச்சதண்ணீரையும் குடித்து மகிழ்கின்றனர். இறுதியாக பூசாரி குடித்து விட்டு அந்த குடத்தில் உள்ள காசை எடுத்து நீர் நிலையில் குளித்துவிட்டு ஈரமான ஆடையுடன் கடைக்கு சென்று அந்த பணம் முழுவதற்கும் எண்ணை வாங்கி அந்த ஊரில் உள்ள காளியம்மன் கோயிலில் விளக்கு ஏற்றி வழிபாடை நிறைவு செய்கிறார். பங்காளிகளின் குலதெய்வப் பூசப்பெட்டி எங்கு உள்ளதோ அங்கு சென்று வழிபாடு செய்து கோடாங்கியின் மூலமாக அந்த தெய்வ அருள் வார்த்தைகள் குல பங்காளிகளுக்கு கூறப்படுகின்றது.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

**சிறுமிக்கு அருள் இறக்குதல்**

பங்காளிகளின் வீட்டில் பூப்படையாத பத்து வயதிற்குட்பட்ட பெண்பிள்ளைகளுக்கு மூர்த்தியம்மன் அருள் இறக்கி, அந்த பிள்ளையிடம் தெய்வத்தின் பெயர், தெய்வம் வந்த கதை தெய்வத்திற்குப் பிடித்த பட்டு கேக்கப்படுகின்றது. பின்பு மச்சம் வைக்கப்படுகின்றது. (மச்சம் என்றால் 11 சாணி உருண்டையில் எதாவது ஒரு உருண்டையில் மல்லிகைப்பூ வைக்கப்படுகிறது. அந்த பூ உள்ள உருண்டையைத் தெய்வம் வந்து ஆடும் சிறுமி எடுக்க வேண்டும். சிறுமி எடுத்து விட்டால் சிறுமியை இரண்டு மாதத்திற்கு விரதம் இருக்க செய்து களரி வழிபாடு நடத்தப்படுகிறது. சிறுமி மச்சம் எடுக்கவில்லை என்றால் வேறு ஒரு சிறுமிக்கு அருள் இறக்கப்படும்.

**சாமியாடிகள் தீர்த்தம் ஆடல்**

சாமியாடிகள் அனைவரும் திரும்ப அழகர் கோயில் சென்று தீர்த்தம் ஆடி அழகரைச் சேவித்து பின்பு பதினெட்டாம்படி கருப்பசாமியை வழிபட்டு அங்கு சாமியாடிகளுக்கு அவதார அடி என்று சாட்டை வைத்து சாமியாடிகள் தலையில் அடிக்கப்படுகின்றது. பின்பு தலையைச் சுற்றி சூரத்தேங்காய் உடைத்து விட்டு குலதெய்வக் கோயிலுக்கு வருகின்றனர்.

**களரி அன்று**

பங்காளிகளின் கையில் காப்பும் கட்டி, பூசைப்பெட்டி உள்ள இடத்தில் சாமியாடிகளுக்கு அருள் இறக்கப்பட்டு அந்த தெய்வத்திற்குரிய ஆடை அணிகலன்கள் அணியச்செய்து பூசைப்பெட்டியுடன் அந்த ஊர் பெருமாள் கோயில் சென்று பூசைப்பெட்டியை இறக்கி வைத்து வழிபாடு செய்து பின்பு கோயில் முன்பு அக்கினி (நெருப்பு) வளர்த்து சாமியாடிகள் அனைவரும் அக்கினிச்சட்டி ஏந்தி மூர்த்தியம்மன் கோயிலுக்கு சென்று பூசைப்பெட்டியை இறக்கி வைத்து வழிபடுகின்றனர். பூசாரி பொங்கல் வைத்து, சமியாடிகள் ஒன்று சேர்த்து அருள் இறக்கி பனியாரம் சுட்டு பாசிப்பருப்பு படையல் மற்றும் ஆட்டுக்கிடாய் பலியிட்டு கருப்பசாமிக்கு சாராயம் படைத்தும் வழிபடுகின்றனர். பின்பு அனைத்து பங்காளி மக்களும் பொங்கல் இட்டும், ஆட்டுக்கிடாய் பலியிட்டும் வழிபாடு நடத்தி மகிழ்கின்றனர். முளைப்பாரியும் கொண்டு வந்து வழிபடுகின்றனர். அன்று அருள்வந்தாடும் சிறுமியை தெய்வமாகவே

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

கருதுகின்றனர். மறுநாள் சாயங்கால வேலையில் பூசைப்பெட்டியை இருப்பிடம் சேர்த்துவிட்டு வழிபாட்டினை நிறைவு செய்கின்றனர். பின்பு மறுவாரம் பொங்கல் இட்டு வழிபடுவர். இந்த வழிபாட்டை மறுதழுகை பொங்கல் வழிபாடு என்றும் அழைக்கின்றனர்.

**காவடிக்காரஅம்மன்**

காவடிக்காரஅம்மன் தெய்வத்தைக் கொள் ஆசாரி இனமக்கள் வழிபடுகின்றனர். ஓர் வயதான பாட்டி, முருகனுக்குக் காவடி எடுத்து நடந்து வரும் பொழுது காட்டிற்குள் இறந்து விடுகின்றது. சில காலம் கழித்து பாட்டி அந்த இனமக்களின் கனவில் தோன்றி நான் காட்டில் இருக்கின்றேன், என்னை வந்து வழிபடுங்கள், நான் என்னை வழிபடும் மக்களைப் பாதுகாத்துக் கொள்வேன் என்று கேட்டு கொண்டதால் அன்றுமுதல் காட்டுப்பகுதியில் அப்பாட்டியினை வழிபட்டு வருகின்றனர். சில சமயங்களில் காட்டுப்பகுதிக்குப் போக முடியாததால் அங்கு இருந்து பிடிமண் எடுத்து வந்து, சிறு பீடம் அமைத்து வழிபாடு நடந்தி வந்திருக்கின்றனர். அந்த தெய்வத்திற்கு மாசி மாதம் சிவராத்திரி வழிபாடும், வைகாசி மாதம் சிறப்பு வழிபாடும் நடைபெறுகின்றது. சைவ வழிபாட்டில் மட்டும் எந்த உயிரையும் பலியிடுவது கிடையாது. 2000ல் கோயில்கட்டி பூசை பெட்டி வைத்து வழிபாடு நடைபெற்றது என்றும், 2016ல் வைகாசி மாதம் சிறப்பு வழிபாடு நடைபெற்றது என்றும் மக்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

**பூசைப்பெட்டி**

காவடிக்காரஅம்மன் பூசைப்பெட்டியில் அம்மனுடைய ஆடை, காவடி எடுத்தாற்போல் வெங்கல பெண்ணின் சிலையும் உள்ளது.

**மருதாய் அம்மன்**

மருதாய் தெய்வம் மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் மருதங்குடி என்ற ஊரில் உள்ளது. போத்தநதியில் உள்ள மருதன், குடும்பன் வகையர்கள் மாசிக்களரியில் போத்தநதியில் இருந்து சாமியாடிகளுக்கு அருள் இறக்கி ஆடிப்போவது வழக்கமாக இருந்து உள்ளது. மருதங்குடிக்கு ஆடிப்போகும் போது மருதங்குடி தேவர் இனமக்களுக்கும் போத்தநதி குடும்பன் இனமக்களுக்கும் இடையே

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

சாதிப்பூசல் வளர்ந்துள்ளது. அந்த சமயம் சண்டை போட்டு விட்டு வந்து விட்டனர் என்றும், அதனால் போத்தநதி மருதன் குடும்பன் வகையர்கள் ஒன்று சேர்ந்து மருதங்குடியில் உள்ள தெய்வத்தைப் பிடிமண் எடுத்து வந்து வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. முதன்மைத் தெய்வமாக மருதாய் அம்மன், சாலைக்கரையான் அம்மனையும், துணைத்தெய்வமாக முத்தையா, பாப்பாத்தியம்மனையும் மற்றும் பிற 21 தெய்வங்களையும் எடுத்து வந்து வழிபடுகின்றனர். காலப்போக்கில் மருதாயம்மன், சாலைக்கரையான், முத்தையா, பாப்பாத்தியம்மன் மட்டும் வழிபாட்டிற்கு உள்ளதாகவும் மற்ற தெய்வத்தின் பெயர் தெரியவில்லை என்றும் கூறுகின்றனர். வழிபாடு மாசி மாதம் பயர் அவித்து பொங்கல் வைத்து வழிபாடு நடைபெறுகின்றது என்றும் 2019ல் மருதாயம்மன் கோயில் கோபுரம் கட்டி குடமுழுக்கு நடைபெற்றது என்றும் கூறுகின்றனர்.

**முடிவுரை**

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாரத்திலுள்ள மா.போத்தநதி கிராமத்தில் அமைந்துள்ள மாரியம்மன், மூர்த்தியம்மன், மருதாயம்மன், காவிடிகார அம்மன் போன்ற பிடிமண் பெண்தெய்வக் கோயில்களையும் அதன் வழிபாட்டு முறைகளையும் இவ்ஆய்வு கட்டுரையின் வழி அறியமுடிந்தது. பெரும்பாலும் பிடிமண் தெய்வங்கள்; தொலைவில் உள்ள காரணமாகவோ அல்லது சாதிப்பூசல் காரணமாகவோ ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயர்ந்துள்ளதையும் அறியமுடிகின்றது.

## குறிப்பு

[1] மறைமலை அடிகள், *தமிழர் சமயம்*, ப.159.

[2] எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம். *முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்*. ப.1

[3] ப.லட்சுமி, வயது 85, ம.போத்தநதி.

[4] பா.சின்னம்மா, வயது 89, ம.போத்தநதி.

[5] கோ.சீனியம்மா, வயது 65, ம.போத்தநதி.

[6] வே.பார்வதி, வயது 80, நாகையாபுரம்.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

[7] முத்துச்சாமி, வயது 60, போத்தநதி.

[8] நா.கிருஷ்ணன், வயது 62, போத்தநதி.

[9] கி.நாகஜோதி, வயது 55, போத்தநதி.

[10] க.பாண்டியம்மாள், வயது 60, போத்தநதி.

[11] ந.முத்தையா, வயது 62, போத்தநதி.

[12] மு.பூங்கொடி, வயது 57, போத்தநதி.

[13] பா.பஞ்சவர்ணம், வயது 50, போத்தநதி.

[14] சோ.பொன்னுத்தாய், வயது 68, போத்தநதி.

[15] கோ.பரதன் கோடாங்கி, வயது 65, வில்லூர்.

## References

[1] Maraimalai Adigal, *Tamilar Samayam*, p.159.
[2] S.R.Balasubramaniam. *Early Chola Archiecture and Statues*. p.1.
[3] P.Lakshmi, Age 85, M.Pothanathi.
[4] Pa. Chinnamma, Age 89, M.Pothanathi.
[5] Ko.Seeniamma, Age 65, M.Pothanathi.
[6] Ve. Parvathi, Age 80, Nagaiyapuram.
[7] Muthusamy, Age 60, M.Pothanathi.
[8] Na. Krishnan, Age 62, M.Pothanathi.
[9] Ki.Nagajothi, Age 55, M.Pothanathi.
[10] Ka.Pandiammal, Age 60, M.Pothanathi.
[11] Na. Muthiah, Age 62, M.Pothanathi.
[12] Mu. Poongodi, Age 57, M.Pothanathi.
[13] Pa. Panjavarnam, Age 50, M.Pothanathi.
[14] So. Ponnuthai, Age 68, M.Pothanathi.
[15] Ko. Barathan Kodangi, Age 65, Villur.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி** /Author Contribution Statement: இல்லை /NIL
**கட்டுரையாளர் நன்றியுரை**/Author Acknowledgement**:** இல்லை /Nil
**கட்டுரையாளர் உறுதிமொழி** /Author Declaration**: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்/.**I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

Volume 1, Issue 1, November 2020 E-ISSN: 2583-0880

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.